<u>**காங்கயம் நகராட்சி**</u>
<u>**மன்றக்கூட்டத்தாள்**</u>

**நிகழும் விளம்பி வருடம் தமிழ் மாதம் வைகாசி 16–ஆம் நாள் ஆங்கில வருடம் 2019 மே 30 ஆம் தேதி வியாழன் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரணகூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றபொருள்:1**

**கோப்பு எண் :746/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பஸ் நிலையம் செல்லும் சாலையில் இராஜாஜி வீதி பிரிவு முதல் திருச்சி கோவை ரோடு ரவுண்டானா வரை அமைக்கப்பட்டுள்ள வடிகால் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது. மேலும், இந்த வடிகாலின் தரைதளம் சேதமடைந்துள்ளது. பக்கவாட்டு சுவர்களும் பழுதடைந்து உள்பக்கமாக சரிந்து வடிகாலின் அகலத்தை பல இடங்களில் இறுக்கியுள்ளது. இதனால் கழிவுநீர் செல்ல இயலாமல் தேங்கியுள்ளது. இதனால் சுகாதாரக்கேடு ஏற்படும் சூழ்நிலையுள்ளது. எனவே, வடிகாலை சுத்தம் செய்து சீரமைத்து புதியதாக வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு தேவையான Levelling, drainage water அளவு மற்றும் design செய்து கட்டுமானம் அமைக்க வேண்டியுள்ளது. பணியின் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் இந்த பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1205 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:2**

**கோப்பு எண் : 63 /2019/இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை சீராக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. பெரியார் நகர், கணபதி நகர் பகுதிகளில் 3'' விநியோக குழாயிலிருந்து 8" குடிநீர் விநியோக குழாய்க்கு குடிநீர் விநியோகத்தை மாற்றியமைத்து கேட்வால்வுகள் பொருத்துதல்
2. அகஸ்திலிங்கம் பாளையம் ரோடு பகுதியில் எம்.ஜி.ஆர் காடு OHT குடிநீர் விநியோகத்தை 60 எச்.பி மின்மோட்டார் குடிநீர் விநியோகத்துக்கு மாற்றுதல்
3. தாளக்கரையில் 100 எச்.பி HSC Pump செட்டின் Foot valve பழுதுகளை சரிசெய்து Pressure relief valve பொருத்துதல்

மேற்படி பணிகள் குடிநீர் அவசர அவசியம் கருதி அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு ( ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1206 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:3**

**கோப்பு எண் : 302 /2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் கிடைக்கும் பொருட்டு குடிநீர் திட்ட மெயின் குழாய்கள், விநியோக குழாய்கள் மற்றும் கேட்வால்வுகள், சிறுமின் விசைப்பம்பு திட்டங்களில், கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனடியாக கால தாமதமின்றி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில் வார்டு எண்.1 முதல் 9 வரையிலான பகுதிகளில் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்ததொகை முடிவடையும் நிலையில் உள்ளது. தற்சமயம் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி இந்த பராமரிப்பு பணியினை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு வழங்கலாம். இதற்கு ஒப்பந்ததாரரின் விருப்பம் கோரலாம். இதற்கு ஒப்பந்ததாரரின் விருப்பம் கோரலாம். மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1207 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:4**

**கோப்பு எண் : 528 /2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிலை ரோட்டில் நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டுள்ளது. இதன் முன்புறமாக சடங்குகள் செய்ய வசதியாக ஒரு நிழற்கூடம் அமைத்து தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பணி மிகவும் அவசியமான பணியாக உள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு ( ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1208 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:5**

**கோப்பு எண் : 526 /2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு காளியப்பா ஆஸ்பத்திரிக்கு செல்லும் சாலை – கோவை ரோடு சந்திப்பு அருகே அமைக்கப்பட்டுள்ள பாலம் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது. எனவே, இந்த பாலத்தை பழுதுகள் சரிசெய்து சீரமைக்க வேண்டியுள்ளது. இதனால், வடிகாலில் வரும் கழிவுநீர் பாலத்தின் வழியாக செல்ல இயலாமல் தேங்கிய நிலையில் உள்ளது. இந்த பாலத்தை புதுப்பித்து அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1.25 இலட்சத்திற்கு ( ஒரு இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1209 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:6**

**கோப்பு எண் :196 /2019/இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

1. அலுவலகம் முன்புறமாக பேவர் பிளாக் அமைத்தல்
2. நகராட்சி பெயர் பலகைகள் வைத்தல்
3. பொதுமக்கள் உபயோகத்திற்கு மின்விசிறிகள் அமைத்தல்
4. அலுவலக அறையில் Portition அமைத்தல்
5. மேலாளர் அறையில் ஏ.சி பொருத்துதல்
6. அழகு செடிகள் பதியம் செய்தல்
7. உபயோகமற்ற நிலையிலுள்ள கழிப்பிடத்தை அப்புறப்படுத்துதல்

மேற்படி பணிகள் மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1230 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:7**

**கோப்பு எண் : 197/2019/இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்தி சீரான குடிநீர் விநியோகம் கிடைக்கும் பொருட்டு கீழ்க்காணும் இடங்களில் குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது

வனிதா கல்வி நிலைய வீதி, சாயப்பட்டறை வீதி, பாலியக்காடு, ராஜ ராஜேஸ்வரி பள்ளி வீதி, சின்னாய்புதூர், பாரதியார் வீதி, வக்கீல் வீதி, கோவை ரோடு மற்றும் சக்தி நகர், முஸ்லீம் வீதி பகுதிகளில் குழாய் விஸ்தரிப்பு செய்வதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1231 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:8**

**கோப்பு எண் :40/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு பெருமாள் கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள கான்கீரிட் சாலை தேய்ந்து பழுதடைந்துள்ளது. எனவே, இதனை பழுதுகள் சரிசெய்து புதுப்பித்து தருமாறும் தற்சமயம் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுவதாகவும் இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இந்த கான்கீரிட் சாலையை சீரமைத்து புதுப்பிக்கும் பணி மேற்கொள்வது அவசியமாக உள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1232 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
**மன்றபொருள்:9**

**கோப்பு எண் : 8/2019/இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பதிவேடுகள் வைக்கும் அறை போதுமானதாக இல்லை. இதனால் ஒவ்வொரு பிரிவிலும் கோப்புகள் வைக்க இடமின்றி அலுவலர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த குறைபாட்டை சரிசெய்ய போதுமான இடவசதிகள் கொண்ட பதிவுகள் வைக்கும் அறை அமைக்கப்பட வேண்டும். இதற்கு அலுவலகத்தின் மேல் மாடியில் உள்ள இடத்தை பயன்படுத்தலாம். இந்த பணி மிகவும் அவசியமான தேவையானதாகும். இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1233 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:10**

**கோப்பு எண் : 16 /2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பங்களாப்புதுார் ரோடு மெயின்சாலையில் தெற்கு பகுதி பிரிவிலிருந்து கிழக்காக வடிகால் அமைப்பு இல்லாத நிலையுள்ளது. இதனால் பொதுமக்கள் இப்பகுதியில் வடிகால் அமைக்க கோரி வருகின்றனர். எனவே, பங்களாபுதுார் பிரிவு முதல் சிவா ஸ்டீல் கடை வரை வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1234 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:11**

**கோப்பு எண் : 18/2019/இ1**

காங்கயம் நகராட்சி பங்களாப்புதூர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள வடிகாலிலிருந்து கழிவுநீர் தெற்காக சென்று தேங்கி விடுகிறது. இங்கிருந்து கழிவுநீர் வெளியேற வடிகால் வசதிகள் இல்லை. இதனால் சுகாதாரக் கேடு ஏற்படும் நிலையுள்ளது. இக்குறைபாட்டை சரி செய்ய பங்களாபுதூர் மெயின்ரோட்டிலிருந்து மோட்டார் வைத்து பம்ப் செய்து தாராபுரம் ரோடு அண்ணாநகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பிரதான வடிகாலில் வெளியேற்றலாம். இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1235 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:12**

**கோப்பு எண் : 17/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கோவை ரோடு ராம் நகர் பகுதியில் குறுக்கு வீதியில் வடிகால் வசதிகள் இல்லை. எனவே, இந்த தெருவில் வடிகால் வசதி ஏற்படுத்தி தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர். இப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1236 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:13**

**கோப்பு எண் : 37/2019/இ1**

காங்கயம் நகராட்சி உரக்கிடங்கில் சேகரமாகும் பிளாஸ்டிக் பொருட்களை உதிரிகளாக வைத்திருக்காமல் பேக்கிங் செய்து வைக்க Baling machine அவசியமாக தேவைப்படுகிறது. அப்பொழுதுதான் இதனை எளிதாக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கொண்டு செல்ல இயலும். எனவே 15 kg to 20 kg baling machine –1 எண்ணிக்கை வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1237 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:14**

**கோப்பு எண் : 38/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலகம், தண்ணீர் பந்தல் நீருந்து நிலையம், தாளக்கரையிலுள்ள தலைமை நீரேற்று நிலையம், சென்னிமலை ரோட்டில் உள்ள எரிவாயு தகனமேடை, அம்மா உணவகம் மற்றும் பேருந்து நிலையங்களில் தீ விபத்துகள் எதுவும் ஏற்பட்டால் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாய் தீயணைப்பான் கருவிகள் பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1238 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:15**

**கோப்பு எண் : 64/2019/இ1**

காங்கயம் நகராட்சி பேருந்து நிலையத்தை 8.8.2019 முதல் ஓராண்டிற்கு அங்கீகாரம் பெற பேருந்து நிலையத்தை புதுப்பித்து கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி , கடை, உணவகம், பேருந்து நிறுத்தத்திற்கான பாந்துகள் பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது . இப்பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1239 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:16**

**கோப்பு எண் : 67/2019/இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.1 முதல் 9 வரையிலான பகுதிகளில் சிறுமின் விசைப்பம்பு திட்டம், குடிநீர் விநியோக மெயின் குழாய்கள் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1240 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:17**

**கோப்பு எண் :230/2019/இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.10 முதல் 18 வரையிலான பகுதிகளில் சிறுமின் விசைப்பம்பு திட்டம், குடிநீர் விநியோக மெயின் குழாய்கள் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளலாம். இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1241 . நாள்.30.05.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:18**

**கோப்பு எண் :193/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு அமராவதி மற்றும் காவிரி ஆறுகளை நீராதாரமாக கொண்டு இரு குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் இரண்டாவது காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் நடைபெற்று முடிவடைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் source increase செய்யப்பட்டுள்ளது. இரண்டு புதிய மேல்நிலைத்தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோக மண்டலங்களில் எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, குடிநீர் விநியோகத்தை சீரமைக்கும் பொருட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி குடிநீர் விநியோக மண்டலங்களை சீரமைத்தல், குடிநீர் குழாய் இணைப்பு வேலைகள் செய்தல், கேட்வால்வுகள் பொருத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. தாராபுரம் ரோடு பகுதியை ஐ.பி டேங்க் குடிநீர் விநியோகத்திலிருந்து சந்தைப்பேட்டை டேங் குடிநீர் விநியோகத்திற்கு மாற்றுதல்
2. அய்யாச்சாமி நகர் காலணி மெயின்சாலையில் குடிநீர் குழாய் அமைத்தல்
3. ஏ.சி நகரில் கேட்வால்வுகள் பொருத்துதல் , இணைப்பு வேலைகள் மேற்கொள்ளுதல்
4. அய்யாச்சாமி நகர் காலணி முதல் வீதியில் கேட்வால்வு பொருத்துதல்
5. பாலியக்காடு பகுதியில் இணைப்பு வேலைகள் செய்தல்
6. கோட்டைமேடு, அமராவதி நகர் பகுதிகளில் இணைப்பு வேலைகள் செய்தல்
7. அகஸ்திலிங்கம் பாளையம் ரோடு, அகிலாண்டபுரம் பகுதிகளில் குழாய் இணைப்பு வேலைகள் செய்தல்
8. திரு.வி.க நகரில் இணைப்பு வேலைகள் செய்தல்
9. சோழன் நகர், கோவைரோடு, தாராபுரம் ரோடு, காந்தி நகர், லட்சுமி நகர் பகுதிகளில் குழாய் விஸ்தரிப்பு செய்தல்

மேற்படி பணிகள் குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் அவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1242 . நாள்.30.05.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:19**

**கோப்பு எண் : 9/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தொட்டியபட்டிக்கு பழையகோட்டை ரோட்டிலிருந்து செல்லும் சாலையில் பொதுக்கிணற்றிலிருந்து விநாயகர் கோவில் வரை தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக இருப்பதாகவும், எனவே, இந்த சாலையை புதுப்பித்து தருமாறும் இப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இந்த சாலையின் மீதமுள்ள பகுதி பல்வேறு திட்டங்களின் கீழ் சீரமைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி மட்டுமே பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, இந்த சாலையை புதுப்பித்து சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1243 . நாள்.30.05.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:20**

**கோப்பு எண் : 10/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான சென்னிமலை ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள எரிவாயு தகனமேடையில் பணியாளர்கள் ஊதியம், விறகு மற்றும் இயந்திர பராமரிப்பு பணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம், இந்தப்பணிக்கான ஒப்பந்த தொகை முடிவடைந்துள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் இப்பணியினை மேற்கொள்ளலாம்.. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1244 . நாள்.30.05.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:21**

**கோப்பு எண் : 41/2019/இ1**

காங்கயம் நகராட்சி சந்தைப்பேட்டை வளாகத்தில் (MCC) நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் நிலையத்தில் எடை போடும் உபயோகத்திற்கு எடை போடும் கருவி 300kg -2 எண்ணிக்கை, 20kg - 1 எண்ணிக்கை தேவைப்படுகிறது. மேலும், தண்ணீர் வசதிக்காக அருகாமையிலுள்ள Borewell –லிருந்து தண்ணீர் எடுத்து இரண்டு 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி வைத்து அதன் மூலம் கழிப்பிட உபயோகம் மற்றும் MCC உபயோகத்துக்கு பயன்படுத்த குழாய்கள் அமைக்க வேண்டியுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.10 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1245 . நாள்.30.05.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:22**

**கோப்பு எண் : 65/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அமராவதி நகர் மற்றும் தொட்டியபட்டி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டங்களின் PVC Water tank பழுதடைந்துள்ளது. இதனால் இந்த தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் ஏற்ற இயலவில்லை. இதனால், தண்ணீர் எடுக்க இயலாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மேற்படி பகுதிகளில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு PVC water tank கள் பொருத்த வேண்டியுள்ளது . மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.0.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1246 . நாள்.30.05.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:23**

**கோப்பு எண் : 66 /2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறு மின்விசைப்பம்பு திட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. இந்த மின்மோட்டார்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே, இந்த மின்மோட்டார்களை அகற்றிவிட்டு புதிய மின் மோட்டார்கள் பொருத்த வேண்டியுள்ளது. MCC உபயோகம் மற்றும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்கும் தேவைப்படுவதால் பணியின் அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் இந்த மின்மோட்டார்கள் மாற்றும் பணி அவசியமாக உள்ளது.

1. சந்தைப்பேட்டை வளாகத்தில் – 2எச்.பி நீர்மூழ்கி மோட்டார்
2. சௌடாம்பிகை நகர் – 5 எச்.பி நீர்மூழ்கி மோட்டார்
3. தாராபுரம் ரோடு OHT – SUMP – 15 எச்.பி starter panel board -1 no
4. நகராட்சி அலுவலகம் – 5 எச்.பி Submersible motor

இப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 4.00 இலட்சத்திற்கு ( ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1247 . நாள்.30.05.2019**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:24**

**கோப்பு எண் : 68/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் FSTP அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான இடவசதி ஏற்படுத்திக் கொடுக்க இங்கு சேமிக்கப்பட்டுள்ள குப்பைகளை இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், FSTP க்காக மண் தோண்டுவதால் ஏற்பட்டுள்ள மண் குவியலாலும், இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த மண்ணையும் அப்புறப்படுத்தி சந்தைப்பேட்டை பகுதியில் சேமித்து வைக்கலாம். இதற்கு செயின் Excavator மற்றும் டிப்பர்லாரிகள் வைத்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.50

இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1248 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:25**

**கோப்பு எண் : 87 /2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல இடங்களில் தெருமின் விளக்குகள் அமைக்கப்படாமல் உள்ளது. இதனால் இரவு நேரங்களில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, தெருவிளக்குகள் புதியதாக அமைத்து தருமாறு பொதுமக்கள் கோரி வருகின்றனர். எனவே, கூடுதலாக 50 தெருமின் விளக்குகள் தேவையான இடங்களில் அமைக்கலாம். இப் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு ( ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1249 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:26**

**கோப்பு எண் : 817/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 5 வது வார்டு இராஜாஜி வீதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகாலில் தரைதளம் பக்கவாட்டு சுவர்கள் பழுதடைந்து சரிந்துள்ளது. இதனால் கழிவுநீர் செல்ல வழியின்றி ஆங்காங்கே தேங்கி சாலையில் வழிந்தோடுகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும், சுகாதாரகேடு ஏற்படும் நிலையும் உள்ளது. எனவே, இராஜாஜி வீதியில் சேதமடைந்துள்ள வடிகால்களை அகற்றிவிட்டு புதியதாக தேவையான வாட்டம் வைத்து வடிகால் அமைத்து கழிவுநீரை பேருந்து நிலையம் செல்லும் மெயின் சாலையிலுள்ள பிரதான வடிகாலில் இணைக்கப்பட வேண்டும். பணியின் அவசியம் கருதி மேற்படி வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.14.00 இலட்சத்திற்கு (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1250 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:27**

**கோப்பு எண் :523/2019/இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளுக்கு கீழ்க்கண்டுள்ள இரண்டு குடிநீர்திட்டங்கள் செயல்பட்டு வருகிறது.

1. அமராவதி குடிநீர் திட்டம்
2. காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம்

இதில் அமராவதி குடிநீர் திட்டம் நகராட்சிக்கு சொந்தமான திட்டம். அமரவாதி ஆற்றில் ஒரு ஆண்டிற்கு சராசரியாக 8 மாதங்கள் தண்ணீர் வரத்து இருக்கும். இந்த காலங்களில் தினசரி 1.5 எம்.எல்.டி வரை இத்திட்டத்தின் மூலம் குடிநீர் பெற இயலும். ஆனால், இத்திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையமான தாளக்கரையில் 100 எச்.பி HSC Pumpset ஒன்றும், இத்திட்டத்தின் தண்ணீர் பந்தல் பகுதியில் அமைந்துள்ள நீருந்து நிலையத்தில் 50 கு.வே HSC Pumpset ஒன்று மட்டுமே இயங்கி வருகிறது. இதன் spare motor கள் வாங்கி 30 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிவிட்டதால் அதன் திறன் முழுவதுமாக இழந்து பராமரிப்பு செய்ய இயலாத நிலையில் இயங்காமல் உள்ளது.

எனவே, தாளக்கரை தலைமை நீரேற்று நிலையம் மற்றும் தண்ணீர் பந்தல் நீருந்து நிலையங்களில் மாற்று மின் மோட்டார் பொருத்த வேண்டியது அவசியமாக உள்ளது. தற்சமயம் ஒரு மோட்டார் மட்டுமே இயங்கி வருவதால் இது பழுதானால் குடிநீர் விநியோகத்தை நிறுத்திவிடும் நிலையுள்ளது. எனவே, இரண்டு இடங்களிலும் மாற்று மின் மோட்டார் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1251 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:28**

**கோப்பு எண் : 815/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோடு NSN திருமண மண்டபம் அருகில் நெடுஞ்சாலையில் வடிகால் அமைப்பு இல்லை. இதனால் கழிவு நீர் மற்றும் மழைநீர் செல்ல வழியின்றி சாலையில் தேங்கி விடுகிறது. இதனால் சுகாதாரகேடு ஏற்படும் நிலையுள்ளது. இதனால் இப்பகுதி பொதுமக்கள் வடிகால் வசதிகள் செய்து தர கோரியுள்ளனர். இப்பகுதி முதல் அருகாமையிலுள்ள ஓடைவரை வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.16.00 இலட்சத்திற்கு (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1252 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:29**

**கோப்பு எண் : 816/2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 10 வது வார்டு ஏ.சி நகர் பகுதியில் வடிகால் வசதிகள் இல்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் இதனால் கழிவுநீர் சாலைகளில் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே, இப்பகுதிகளிலிருந்து வடிகால் அமைத்து பங்களாபுதூர் மெயின் சாலையில் ஏற்கனவே உள்ள பிரதான வடிகாலில் இணைக்கப்பட வேண்டும். மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.14.00 இலட்சத்திற்கு (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1253 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:30**

**ந.க.எண்.1662/2018/சி1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவின்படி விக்ரமசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர், திரு.பு.பொன்னம்பலம் அவர்களை காங்கயம் நகராட்சிக்கு பணியிடமாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி விக்ரமசிங்கபுரத்திலிருந்து, காங்கயம் நகராட்சிக்கு வந்ததற்கான இடமாற்றப் பயணப்படி பட்டியல் தொகை ரூ.7584/– ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1254 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:31**

**கோப்பு எண் : 1408/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையக் கடை எண் 5 –ன் குத்தகை உரிமம் 01.12.2016 முதல் 30.11.2019 வரை திரு.எஸ்.பழனிசாமி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இக்கடையின் வாடகையானது 01.04.2018 முதல் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் நிலுவை உள்ளது. இது குறித்து பலமுறை அறிவிப்பு கொடுத்தும் கடை வாடகை செலுத்தாத காரணத்தினால் இக்கடையானது 23.03.2019 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது. எனவே ஏல நிபந்தனைகளின் படி மேற்படியாளருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 31.03.2019 உடன் இரத்து செய்யவும் , வருவாய் இழப்பை தடுக்கும் பொருட்டு கடையினை பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1255 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:32**

**கோப்பு எண் :934 /2019/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு உடையார் காலணி பொது மக்கள் கோவை ரோடு, அகஸ்திலிங்கம்பாளையம், அகஸ்திலிங்கம்பாளையம் ரோடு, திருப்பூர்ரோடு பகுதிகளுக்கு செல்ல சுமார் 3 கி.மீ. தூரம் சுற்றுப்பாதையில் செல்ல வேண்டியுள்ளது. உடையார் காலணியின் மேற்கு பகுதியில் PAP வாய்க்கால் செல்கிறது. இந்த வாய்க்காலை கடந்தால் மேற்படி பகுதிகளுக்கு எளிதாக சென்றுவிடலாம். எனவே இந்த PAP வாய்க்காலின் குறுக்கே ஒரு பாலம் அமைத்து தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பணி மேற்கொள்ள மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார். இந்த பாலம் அமைக்க பொதுப்பணித்துறைக்கு அனுமதி கோரி கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1256 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றபொருள்:33**

**கோப்பு எண் : 934 /2019 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் குடிநீர் திட்ட மெயின் குழாய்கள் மற்றும் வினியோக குழாய்கள், சிறுமின் விசைப்பம்பு திட்டத்தின் மெயின் குழாய்கள் மற்றும் வினியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் பழுதுகள் சரி செய்து பொருத்த வேண்டியுள்ளது. இப்பணிக்காக சில இடங்களில் நெடுஞ்சாலைத்துறை சாலைகள் தோண்டி பணிமேற்வேண்டியுள்ளது. இதற்கு நெடுஞ்சாலைத்துறைக்கு சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. 31–03–2020 வரையிலான காலத்திற்கு . இதற்கான உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1257 . நாள்.30.05.2019**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும்**
**ஆணையாளர்**
**காங்கயம் நகராட்சி**